


04. 08. 2025

தலைப்பு செய்திகள்

பிரதமரின் ரோஜ்கர் மேளா திட்டத்தில் 4 லட்சம் கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க 2 லட்சம் கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் ஷிபுசோரனின் மறைவை ஒட்டி மாநிலங்களவை நாள்முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2030-ம் ஆண்டிற்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலமாக தமிழகம் மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

வைகை அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுர கரையோர மக்களுக்கு 2-ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிக்காகோவில் நடைபெறும் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தக்ஷினேஸ்வரர் சுரேஷ் - அமெரிக்காவின் ஆன்ட்ரூ ஃபெண்டியை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

பிரதமரின் ரோஜ்கர் மேளா வேலைவாய்ப்பு முகாம் மூலம் கடந்த 16 மாதங்களில், 11 லட்சத்திற்கும் மேற்பட்ட இளையோருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அமைச்சர், ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி கடந்த 10 ஆண்டுகளில் 17 கோடிக்கும் அதிகமான இளையோர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சி புரிந்த 10 ஆண்டுகளில் 3 கோடி வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப் பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரதம் ரோஜ்கர் மேளா திட்டத்திற்கு அடுத்த 5 ஆண்டுகளில் 4 லட்சம் கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆட்சியில் வேளாண் பிரிவுகளில் வேலைவாய்ப்பு 19 சதவிகிதமாகவும் உற்பத்தி பிரிவுகளில் 15 சதவிகிதமாகவும் அதிகரித்திருப்பதாக எடுத்துரைத்தார்.

சேவைத்துறையிலும் வேலைவாய்ப்பு உயர்ந்துள்ளதாக கூறிய அமைச்சர், வேலைவாய்ப்பின்மையின் விகிதம் 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளது என்றும், வளர்ச்சியடைந்த பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவு என்றும் குறிப்பிட்டார்.

மக்களவையில் தேசிய விளையாட்டு ஆளுமை மசோதா 2025-ஐ அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று தாக்கல் செய்யவுள்ளார்.

விளையாட்டு துறை மேம்பாடு, விளையாட்டு வீரர்களுக்கான நலத்திட்டங்கள் உள்ளிட்ட விளையாட்டு தொடர்பான பல்வேறு நிலைப்பாடுகளை மேற்கொள்ள இம்மசோதா வகை செய்கிறது.

❖❖❖❖❖❖

சிபு சோரன்

ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சரும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவருமான ஷிபுசோரன் உடல்நலக்குறைவால் புதுதில்லியில் இன்று காலமானார்.

அன்னாருக்கு வயது 81.

சிறுநீரக பாதிப்பால் கடந்த ஒருமாத காலம் புதுதில்லியில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்தார்.

அன்னாரது மறைவிற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஷிபு சோரனின் மறைவு சமூக நீதி பாதையில் மிகப்பெரிய இழப்பாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அடித்தட்டு மக்களின் தலைவராக திகழ்ந்து, ஜார்க்கண்ட் முதலமைச்சராக உயர்ந்து, மக்களுக்காக அளப்பறிய சேவையாற்றியவர் என்று கூறியுள்ளார்.

ஷிபு சோரனின் மறைவால் வாடும் ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் மற்றும் குடும்பத்தினருக்கும், தொண்டர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஷிபுசோரனின் மறைவை ஒட்டி ஜார்கண்ட் மாநிலத்தில் இன்று முதல் 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

அரசு அலுவலகங்கள் இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

சிபுசோரனின் மறைவை ஒட்டி மாநிலங்களவை இன்று நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பீஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

சஞ்சய் மல்ஹோத்ரா

ரிசர்வ் வங்கி நிதிக்கொள்கையின் 3 நாள் கூட்டம் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தை தொடர்ந்து வரும் புதன்கிழமை ரிசர்வ் வங்கியின் இருமாத நிதிக்கொள்கையை அவர் அறிவிக்கவுள்ளார்.

ரெப்போ வட்டி விகித மாற்றங்கள் குறித்த அறிவிப்புகள் இதில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

பிலிப்பைன்ஸ் அதிபர்

ஃபிலிப்பைன்ஸ் அதிபர் ஃபெர்டினன்ட் மார்கோஸ் 5 நாள் அரசுமுறை பயணமாக இன்று பிற்பகல் புதுதில்லி வருகிறார்.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்டோரை நாளை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா உடன் ஜனநாயக மதிப்பீடுகள், கடல்சார் நலத்திட்டங்கள், பிராந்திய அமைதிக்கான அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று அதிபர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

2030-ம் ஆண்டிற்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலமாக தமிழகம் மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

தூத்துக்குடி மாவட்டத்தில் 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை இன்று துவக்கிவைத்து பேசியஅவர்,

தமிழகத்தில் தொழில்வளர்ச்சியை மேம்படுத்த சிறப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றார்

கடந்த 4 ஆண்டுகளில் பத்தரை லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தென் மாவட்டங்களை தொழில் வளர்ச்சி மாவட்டங்களாக உருவாக்கும் நோக்கில் தூத்துக்குடி மாவட்டத்தில் 250 ஏக்கர் பரப்பளவில் விண்வெளி பூங்கா அமையவுள்ளது என்றார்.

முருங்கை ஏற்றுமதி சாகுபடி கட்டமைப்பிற்காக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வசதிமையம் உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக முதலமைச்சர் முன்னிலையில் 41 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

2 ஆயிரத்து 530 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய தொழில் திட்டங்களையும் முதலமைச்சர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது மாநில தொழில்துறை அமைச்சர் திரு. TRB. ராஜா உடனிருந்தனர்.

❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

மாணாக்கருக்கு கற்றல் விளைவுகள் அடிப்படையிலான வினாக்களுக்கு பதிலளிக்கும் திறனை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் பணியாற்ற மாநில பள்ளிக்கல்வித்துறை அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவுறுத்தியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பாச்சல் பகுதியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அடைவுத்தேர்வு ஆய்வுக்கூட்டத்தில் இன்று அவர் உரையாற்றினார்.

இம்மாவட்டத்தில் உள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களில் மாணாக்கரின் கற்றல் திறனறி தேர்வு குறித்து கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖

அஞ்சல்

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட அஞ்சல் தொழில்நுட்ப சேவைகள் இன்று முதல் செயலாக்கத்திற்கு வந்துள்ளன.

இதனொருபகுதியாக விழுப்புரம் தலைமை அஞ்சலகத்தில் மேம்படுத்தப்பட்ட அஞ்சல் தொழில்நுட்ப சேவை இன்று தொடங்கியது.

இதன்மூலம் கணினி மூலமும், செல்போன் மூலமும் நேரடியாக கண்காணிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து விழுப்புரம் தலைமை அஞ்சல் கோட்ட அதிகாரி திரு. சாதிக்பாட்சா தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

கள்ளக்குறிச்சி தலைமை அஞ்சலகத்திலும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப சேவையை விருத்தாச்சலம் அஞ்சல்கோட்ட கண்காணிப்பாளர் திரு.ஜெயசீலன் இன்று துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

மூர்த்தி

மதுரை இரணியம் ஊராட்சி ஜாங்கிட் நகரில் புதிய நியாயவிலைக் கடையை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு. மூர்த்தி இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவைத்தார்.

கன்னிக்குடி கண்மாயில் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளை பார்வையிட்ட அமைச்சர், மியாவாக்கி முறையில் 5 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணிகளையும் துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖

வைகை அணை

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் மழைக் காரணமாக வைகை அணை நிரம்பும் தருவாயில் உள்ளது.

இதனையடுத்து கரையோர மக்களுக்கு 2-ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖

தூத்துக்குடி வாய்ஸ்

தூத்துக்குடி தூய பனிமயமாதா பேராலயத்தின் 443-வது ஆண்டு பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான மாதாவின் சொரூப பவனி நாளை நடைபெறுகிறது

❖❖❖❖❖❖

டென்னிஸ்

சிக்காகோவில் நடைபெறும் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தக்ஷினேஸ்வரர் சுரேஷ் - அமெரிக்காவின் ஆன்ட்ரூ ஃபெண்டியை இன்று எதிர்கொள்கிறார்.

...

ஜெர்மனி சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - ஆஸ்திரியாவின் Jurij Rodionov வை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

லண்டன் ஓவலில் இந்தியாவிற்கு எதிரான 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற மேலும் 35 ரன் எடுத்தாக வேண்டும்.

374 வெற்றி இலக்குடன் 4-ம் நாள் ஆட்டத்தை நேற்று தொடர்ந்த இங்கிலாந்து ஆட்ட நேர இறுதியில் தனது 2-வது இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 339 ரன் எடுத்திருந்தது.

ஸ்கோர் :

முதல் இன்னிங்ஸ் இந்தியா 224

இங்கிலாந்து 247

இரண்டாவது இன்னிங்ஸ் இந்தியா 396.

5-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖